# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
## அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

**தை மாத வெளியீடு**

(January-February 2013)

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114**

www.gurudevar.org Email: indhuism@gmail.com

**காணிக்கை ரூ.4/-**

# உள்ளுறை

1. 'வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்' - சித்தர் மாநாடு அழைப்பு அறிவிக்கை பாகம்-2

இந்தப் புத்தகத்தின் இறுதிப் பகுதியான 'சித்தர் மாநாடு ஏன்?' என்ற கட்டுரை

2. இது வரை வெளிவந்துள்ள இதழ்களும், கட்டுரைகளும்

3. எங்களைச் சந்தித்தால்?!.... கட்டுரையில் உள்ள கருத்துக்களும் அவற்றின் விளக்கக் கட்டுரைகள் வெளியான இதழ்களும்.

# சித்தர்கள் மாநாடு ஏன்?!

1) சித்தர்களின் கொள்கை-யையும் குறிக்கோள்களையும் உலகம் முழுவதும் பரப்பிட முதல்நிலை முயற்சியாகச் சித்தர்களின் மாநாடு கூட்டப் படுகிறது.

2) உலகில் சாதி, இன, மொழி, மதச் சண்டை முதலியவற்றால் சச்சரவுகள் வளர்ந்து பெரிய பெரிய வடிவங்களைப் பெற்று வருகின்றன. இவற்றை மிகமிக விரைவில் தடுத்து நிறுத்தி முழுமையாக அகற்றியாகிட வேண்டும். இல்லாவிட்டால் பதினெண் சித்தர் பீடாதிபதிகளும், பதினெண் சித்தர் மடாதிபதிகளும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் அயராது உழைத்து உருவாக்கிய மனித தத்துவம் அல்லது மனிதம் எனப்படும் அன்பு, பற்று, பாசம், குடும்பப் பற்று, மனப்பொறுமை, அடக்கம், தோழமை, நட்பு, .... முதலிய இனிய பண்புகள் நலிந்து, மெலிந்து, அழிய நேரிட்டிடும். அதன்பிறகு மானுடர்கள் ஒருவரை யொருவர் தாக்கியும், கொலைகள் செய்தும், கொள்ளையடித்தும் வாழும் காட்டுமிராண்டி வாழ்க்கையே மீண்டும் உருவாகி விடும் ஆபத்தே விளையும்.

3) அதாவது உணவு, உடை, ஆயுதங்கள் முதலியவை விஞ்ஞானத்தால் மிகமிக உயர்ந்து வளர்ந்து விட்டன. ஆனால், மனிதர்களுக்கிடையில் மொழி, இனம், நாடு, மதம், சாதி, .... என்பனவற்றின் பெயரால் சிறிய பெரிய சண்டை சச்சரவுகளால் சிறிய பெரிய போர்களும் ஏற்பட்டு அழிவையே தரும். அதுவும் விஞ்ஞான ஆயுதங்கள் மிகப் பெரிய பேரழிவை உருவாக்கக் கூடியவை ஆகும்.

4) எனவேதான், தனிமனிதர்கள் திருந்த ஆன்மீக அறிவும் மிகப்பெரிய செய்முறைப் பயிற்சிகளும் அதிகமாகிட வேண்டும். மெய்ஞ்ஞான அமைதி, நிம்மதி, நிறைவு, ... முதலியவை தனிமனிதர் வாழ்வில் வளமாக வளர்ந்தோங்கிட வேண்டும். அதனடிப்படையில்தான் சாதி, மத, மொழி, இன, நாட்டு வெறி-யுணர்வுகள் தணிந்து, நெறிமுறைப் பட்டிடும். அப்பொழுது படிப்படி-யாக மனித நேயம், மனிதத் தோழமை, மனித நட்பு, மனித

ஒற்றுமை, மனித நிம்மதி, மனித நிறைவும், ... முதலியன முளே விட்டுக் கிளேத்துச் செழித்தோங்கி விடும்.

5) அதற்காகத்தான் சித்தர்கள் 'சித்தர் நெறி', 'வேதத் தத்துவம்', 'சைவ சித்தாந்தம்' என்பவைகளேச் செந்தமிழில் படைத்து; அனேத்துக்கும் 'இந்து மதம்' என்று பெயரிட்டனர். 'இந்துமாக்கடல் போன்றது இந்துமதம்' என்று கூறியுள்ளார்கள். மேலும், எல்லாக் கடல் கரைகளிலும் இந்துமதமே வாழும்; இந்துமத நாடான இந்தியா உலகம் முழுவதும் இந்து மதம் மூலமாக உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கும். ..... என்று பலவாறு இந்து மதத்துக்கும் தமிழர்க்கும் உள்ள உறவு பற்றி நான்கு வேதங்களிலும் குறிப்புக்கள் காணப் படுகின்றன.

6) அண்டபேரண்டங்களில் இருந்து வந்திட்ட சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும் 'அண்டபேரண்ட அருளாட்சி மொழியுமான தெய்வீகச் செந்தமிழ் மொழியுமான தமிழ் மொழியில்; இந்து வேத நூல்களே அருளினுர்கள். இவர்கள், "இளமுறியாக் கண்டம்" என்ற முதல் கண்டத்தில் ஓடிய ஆறுகளிலேயே பெரியதும், மிக நீண்டதுமான "குமரி ஆற்றின் பெயரால் குமரிக் கண்டம்" என்னும் பெயரில் இளமுறியாக் கண்டத்தைக் குறிக்கிருர்கள்.

7) இந்தச் சித்தர்களே, அண்டபேரண்டம் முழுதும் பரவியுள்ள இந்துமதத்தை; இளமுறியாக் கண்டத்தில் பரப்பினுர்கள். அப்படி இந்துமதம் பரவிய பகுதிகளே யெல்லாம் 'இந்தியா' என்று பெயரிட்டனர். இதுபற்றி இருக்கு வேதக் குறிப்புக்களேச் சுருக்கி எழுத ஆரம்பித்திட்ட 'பஃறுளியாற்றங் கரைக் கருவூருர்' எவ்வளவு வேகமாக, விரைவாக இந்து மதத்தைப் பரப்பினுலும்; இந்து மதம் யாண்டும் பரவியுள்ள "இந்தியாக்கள், சிறுசிறு நாடுகளாகக் குமரிக் கண்டத்தில் ஆங்காங்கே தனித் தனி நாடுகளாகத்தான் இருக்கின்றன. என்றைக்கு இந்தக் குமரிக் கண்டம் முழுதும் இந்துமதம் பரவியுள்ள இந்தியாவாக மாறுமோ தெரியவில்லே. இதற்காக முத்தமிழ்ச் சங்கங்களே ஊர்தோறும் தோற்றுவித்துத் தமிழ்மொழி

செழித்தோங்கச் செய்ய வேண்டும். "தமிழே இந்துமதம்", "இந்துமதமே தமிழ்மொழி" என்ற கருத்தை அனைத்து மக்களும் புரிந்து கொண்டிட்டால்தான், குமரிக் கண்டம் "இந்தியா" என்ற பெயரைப் பெறும். அதுவரை "இளமுறியாக் கண்டம் எனப் படும்" குமரிக் கண்டத்தில் சுற்றி யுள்ள மாக்கடல் வெளிப்பரப்பு "இந்துமாக் கடல்" என்றே அழைக்கப் படட்டும். இந்த இளமுறியாக் கண்டத்தில் பல்வேறு மொழியினரும் அம்மொழி வழியாக வாழும் மக்களும் தமிழ்மொழி கற்றிட்டால் தமிழர்கள் என்ற இனத்தில் சேர்ந்து விடுகிறார்கள். இந்தத் தமிழர்கள் தங்களின் முன்னோர்களான சித்தர்கள் அருளிய இந்துமதத்தை ஏற்றுக் கொண்டு இந்துக்களாக வாழும் போது தமிழர்கள் (இந்துக்கள் = தமிழர்கள்) என்ற இனத்தவர்களாக மாறுகிறார்கள் என்று கூறுகிறார். இவற்றை இவரே மிகத் தெளிவாக தமது 'குருபாரம்பரியம்' (இந்துமத வரலாறு = தமிழர் மத வரலாறு) 'இலக்கிய பாரம்பரியம்' (இந்துமத இலக்கிய வரலாறு = தமிழ் மொழியின் மொழி வரலாறும் இலக்கிய இலக்கண வரலாறும்), 'அரச பாரம்பரியம்' (தமிழின சமுதாய வரலாறும் அரசியல் வரலாறும் ஆகும்) எனும் மூன்று தொடர் நூல்களிலும் விளக்கிக் கூறுகிறார்.

8) இம்மண்ணுலகுக்கு வந்திட்ட சித்தர்களின் தலைவர் ஆதிசிவனார் ஆவார். இவரே பதினெண் சித்தர் பீடத்துக்கும் மடத்துக்கும் முதல் பீடாதிபதியாக, முதல் மடாதிபதி-யாக விளங்குகிறார். இவர்தான் கடலுள் மறைந்த 'குமரிக் கண்டம்' எனப்படும் இளமுறியாக் கண்டத்தில் தமிழுக்காக மருதமரக் காடுகள் மிகுந்த பகுதியில் 'மருதை மாநகர்' என்றோர் நகரை உருவாக்கினார். அந்த மருதை மாநகரில் தமிழ் கற்கவும், தமிழை ஆராய்ச்சி செய்யவும்; தமிழ் நூல்களை அரங்கேற்றம் செய்யவும் ... தமிழ் மொழியைப் பரப்பவும் வளர்க்கவும் ஏற்பாடு செய்தார்.

9) முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியும், மடாதிபதியுமான ஆதிசிவன் குமரிக் கண்டத்தின் தென்பகுதியில் இருந்திட்ட தென் இமயமலையில் உற்பத்தியான 'தென் இந்து', 'தென் கங்கை', 'குமரியாறு' என்ற மூன்றும் இணைந்த இடத்தில்

இந்துவேதத்துக்காக 'அருட்பா' என்ற நகரையும், இந்து மதத்திற்காக 'மோகஞ்சிதருத நகர்' என்ற நகரையும் உருவாக்கி இரண்டையும் வளர்த்தார். அந்த ஆறுகள் மூன்றும் இருந்திட்ட பகுதி 'திருவிடம்' (திரு = கடவுள்கள், தேவர், தேவதைகள், ... குலதெய்வங்கள், குடும்ப ஆண்டவர்கள், பட்டவர்கள் எனும் நான்கு வகைப்பட்ட அருளுலகத்தவர்களும் பத்தியாளர்களும் தங்கும் இடம். எனவே, திராவிடர் என்றால் பத்தியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஆத்திகர்கள் என்ற பொருள்தான் சித்தர்களால் வழங்கப் படுகிறது.

10) இப்படி ஆதிசிவனார் தமிழ்மொழி வாயிலாகத் திராவிடர்களை (பத்தியாளர்களை) உருவாக்கினார். இந்தத் திராவிடர்களை ஏழாயிரம் கல் தொலைவு பரந்து விரிந்து கிடக்கும் குமரிக் கண்டம் முழுதும் அனுப்பித் தமிழ் மொழியினையும், இந்துவேதத்தையும், இந்து மதத்தையும் பரப்பினார்.

11) ஆதிசிவனார் தமிழே 'இந்துவேதம்', தமிழே 'இந்துமதம்', தமிழில் பேசுவதே சிறந்த பூசை, தமிழ் வளர்க்கப் பாடுபடுவதே பெரிய பெரிய ஓமங்களையும், ஓகங்களையும், யாகங்களையும், யக்ஞங்களையும், வேள்விகளையும் செய்வதற்குச் சமமாகும். தமிழ் நூல்களைப் பாதுகாத்தல் கோயில் திருப்பணி செய்வதற்குச் சமம்.... என்று பலவாறு தமிழ் மொழியைச் சிறப்பிக்கின்றார்.

12) அதாவது, ஆதிசிவனார் தமிழ்மொழி செழிச்சி நிலையையும், ஆட்சிநிலையையும் பெற்றிருந்தால்-தான் தமிழினம், தமிழ்ப்பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழ்நாடு.... என்பவையெல்லாம் வள-வளர்ச்சியையும், செழிச்சியையும், ஆட்சியையும் பெற்றிட முடியும் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

13) சித்தர்கள் 'ஏந்தரீகம்', 'தாந்தரீகம்' என்ற அருட்கலைகளின் மூலம், இந்த உலகம் முழுதும் மனிதர் பூசை செய்ய, வழிபாடு செய்ய, சாமி கும்பிட.... கோயில்களை உண்டாக்கினார்கள். இந்தக் கோயில்களைக் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்குச் செய்ய வேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

14) அதாவது, விண்ணுலகில் இருந்து, வேற்று அண்ட பேரண்டங்களில் இருந்து இம் மண்ணுலகுக்கு வந்திட்ட கடவுள்கள் என்றும்; இம் மண்ணுலகிலேயே தோன்றிய கடவுள்கள் என்றும் இரண்டு பெரிய பிரிவினைகள் அருளுலகில் உள்ளன. இவற்றிற்கேற்பவே, இவற்றைப் பூசை செய்யும் முறைகளும் ஏற்படுகின்றன. இதனால் மனிதர்கள் தங்களுடைய குறைகளையும், ஏமாற்றங்களையும், ஏக்கங்களையும், தோல்விகளையும், துன்பங்களையும், தொல்லைகளையும் அகற்றிக் கொள்ள அருள் எனும் மருந்தைப் பெற்றிடுவதற்குரிய இடம்தான் கோயில். இதே சமயம், மக்கள் தங்களுடைய வெற்றிகளுக்கும், மகிழ்ச்சிகளுக்கும் துணையாக அருள் எனும் விருந்தைப் பெறுகின்ற இடமும் கோயில்தான். எனவேதான், ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்று மூதுரை பிறந்தது.

15) ஆதிசிவனார் அவருக்கு முன் செயல்பட்டிட்ட அநாதி சிவன்கள் அருளிய அருட் கலைகளோடு சேர்ந்து செயல்பட ‘நான்மறை’, ‘நான்முறை’, ‘நானெறி’, ‘நான்வேதம்’ .... என்று வழிபாட்டுக்குரிய வழிவகைகளை அருளினார். அத்துடன், இம் மண்ணுலகு உய்யும் பொருட்டு கடவுள்களை அணுகும் முறைகளைப் பலவாறாக வழங்கி யுள்ளார்.

16) பொதுவாக, எல்லா மக்களும் கடவுளை நினைத்துத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் படி வேண்டிக் கொள்கிறார்கள். அதற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்லச் சிறப்பான பூசைகள் செய்கின்றார்கள். இதேபோல், ஒரு சிலரின் வாழ்வின் தோல்விகளும், தொல்லைகளும் மிகுதியாக ஏற்படுகின்றன. அப்பொழுது, மக்கள் கடவுள்களிடம் மிகவும் வருத்தத்துடன் பூசைகளைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட பூசைகளை ஆதிசிவனார் தமது இருக்கு வேதத்திலும், முருகப் பெருமான் தன்னுடைய அசுர வேதத்திலும் (யசுர் வேதம்), அதர்வான வேதத்திலும், யாம வேதத்திலும் (சாம வேதத்திலும்) மிகத் தெளிவாகப் பூசை முறைகளைக் கூறியுள்ளார்கள்.

1. பூசை செய்தல்
2. கும்பிடுதல்

3. வணங்குதல்
4. வழிபாடு செய்தல்
5. பரவுதல்
6. அரற்றுதல்
7. பாடுகிடத்தல்
8. அழுகைசெய்தல்
9. தொழுகை செய்தல்
10. எள்ளல் செய்தல்
11. ஏசல் செய்தல்
12. தவம் செய்தல்

என்றிப்படிப் பன்னிரண்டு வகைகளே வழங்கியுள்ளார்.

17) இந்த அளவுக்கு மனிதர்கள் மீது அன்பும், அருளும், பரிவும், இரக்கமும் உடையவர்கள் நமது இந்துமதக் கடவுள்கள். எனவே, கடவுள்கள் மொத்தம் (8,84,736) எட்டு இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து எழுநூற்றி முப்பத்தாறு வகைக் கடவுள்கள் என்ற குறிப்பையும் வழங்குகிறார் ஆதிசிவன். இவர், தமது இருக்கு வேதத்தில் கடவுள்கள் பற்றிய பேருண்மைகளை மேலும் தெளிவாக்குகிறார்.

18)

i. **குடும்ப ஆண்டவர்கள்**:- பட்டவர்கள் - இன்றைய வாழ்வில், நமது முன்னோர்களில் இறந்து போனவர்களை ஆண்டவராக வழிபடுதல்.

ii. **குல தெய்வங்கள்**:- குறிப்பிட்ட குடும்பத்தின் பங்காளிகள், அல்லது உறவு முறைக்காரர்கள் ஒன்று கூடிப் பரம்பரை பரம்பரையாகப் பூசை செய்து வரும் தெய்வங்கள்.

iii. **ஊர்த் தேவர் தேவதைகள்**:- இதில் பெரும்பாலும் அண்ட பேரண்டங்களில் இருந்து இம் மண்ணுலகுக்கு வந்திட்டவர்கள். இவர்களைச் சார்ந்தே குக்கிராமங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள்.... எல்லாம் உண்டாகின்றன மேலும், ஊர்த் தேவர், தேவதைகள் என்று ஆண், பெண் இரு பாலாரும் தேவநிலையில் இருந்து மக்களைப் பாதுகாக்கிறார்கள். இவர்கள் அந்த ஊர்க்காரர்களை மட்டுமே பாதுகாப்பார்கள். இதே போல் அந்தந்த குடும்ப ஆண்டவர்கள், பட்டவர்கள் எனப்படும் ஆண்டவர்கள் அந்தந்தக் குடும்பத்தார்களை மட்டுமே பாதுகாத்திடுவர். அருள் புரிந்திடுவர். இதே போல்தான், குலதெய்வங்கள்

அவரவருக்கு உரிய சந்ததியினரைத்தான் பாது காக்கும்; அருள் வழங்கும்.

iv. **நாட்டுக் கடவுள்கள்**:- இதேபோலத்தான் நாட்டுக் கடவுள்கள் அந்தந்த நாட்டுக்கு உரியவர்களை மட்டுமே பாதுகாத்திடுவார்கள், அருள் வழங்கிடுவார்கள்.

இவைதான் சித்தர்களின் கடவுட் கொள்கை. சித்தர்களின் இந்த 'கடவுட் கொள்கை'தான் அண்ட பேரண்டங்கள் முழுதும் நடைமுறையில், செயல்வடிவில், வழக்கில் வாழுகின்றது. இந்தக் கடவுட்கொள்கையை உலக மக்கள் உணர்ந்து கொண்டால் மதக் கலவரங்கள், மதச் சண்டை சச்சரவுகள், மதச் சிக்கல்கள், மதப் போர்கள் முதலியவை உண்டாக்கப் படவோ, அல்லது உருவாக்கப் படவோ, அல்லது உருவாகவோ.... முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!!!!

19) அதாவது, சித்தர்களின் தத்துவமும், வேதமும், வேதாந்தமும், சித்தமும், சித்தாந்தமும்தான் 'உலக ஒற்றுமை', 'உலக அமைதி', 'உலகச் சமாதானம்', உலகச் சகோதரத் தத்துவம்', உலக அளவில் மொழி விடுதலை, இன விடுதலை, உலக அளவில் பண்பாட்டு விடுதலை, நாகரீக விடுதலை, உலக அளவில் தனி மனிதத்துவ விடுதலை, தனி மனித உரிமை.... முதலியனவற்றை உருவாக்க முடியும்!!! முடியும்!!! முடியும்!!!

20) இப்படிப் பதினெண் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், கடவுள்களின் வகைகளை நான்காக பிரித்துக் காட்டுகிறார்கள். இதனால் உலக அளவில் மதமாற்றமோ, போராட்டமோ, போரோ ஏற்பட வாய்ப்பே இல்லை. இதை விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால்,

i. ஒரு குடும்பத்துக்கு உரிய 'குடும்ப ஆண்டவர்கள்' வேறு எந்தக் குடும்பத்துக்கும் அருளோ, பாதுகாப்போ, உதவியோ வழங்க மாட்டார்கள்.

ii. ஒரு குலத்துக்கு உரிய 'தெய்வங்கள்' வேறு எந்தக் குலத்தார்க்கும் உதவியோ, பாதுகாப்போ, அருளோ வழங்க மாட்டார்கள்.

iii. ஓர் ஊருக்குரிய தேவர் தேவதைகள் வேறு எந்த ஊரார்க்கும், பாதுகாப்போ,

அருளோ! உதவியோ! வழங்க மாட்டார்கள்.

iv. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் வேறு எந்த நாட்டுக்கும் உதவியோ, அருளோ, பாதுகாப்போ வழங்க மாட்டார்கள்.

21) இவ்வாறு கடவுளர் உலகம் பற்றி ஆதிசிவனுர் அருளிய உண்மைகளைத்தான் மற்ற பதினெண் சித்தர்களும் நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் சேர்ந்து எல்லா வகையான இந்துமதச் சடங்குகளையும், சாத்திர சம்பிறதாயங்களையும், திரு நாள்களையும் உருவாக்கினுர்கள். எனவே, சித்தர்களின் மதமான இந்து மதம்தான் உலக மதங்களை எல்லாம் சமத்துவமாக, ஒற்றுமையாக வாழச் செய்வதற்காகத் தோன்றிய மதம். இதனைத் தோற்றுவித்தவர் ஆதிசிவனுர். இந்த இந்துமதமே அண்டபேரண்டங்கள் அனைத்திலும் வாழுகின்ற மதம்.

22) கடவுள்களில் ஒரு குடும்பத்தை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (ஆண்டவர்) என்றும், ஒரு குறிப்பிட்ட குலத்தாரை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (தெய்வங்கள்) என்றும் ஓர் ஊரை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (தேவர் தேவதைகள்) என்றும், ஒரு குறிப்பிட்ட நாட்டாரை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (நாட்டுக் கடவுள்கள்) என்றும் மிகத் தெளிவாகச் சித்தர்கள் இந்துமதக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், குறிக்கோள்களையும் விளக்குகிறுர்கள்.

23) இவ்வளவு விளக்கங்களையும் முறையாகக் கற்றுணரல் எளிது. எல்லோருக்கும் புரியும்படியாகச் சித்தர்களின் இந்துமதம் விளக்கப் படுகிறது. எனவே, யாரும் கடவுள்களின் பெயராலோ, கோயில்களின் பெயராலோ, சாதிகளின் பெயராலோ பிரிவினை பேசுவதோ, ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்வதோ, அதாவது தனிமனிதனோ, குடும்பமோ தங்கள் தங்களின் விருப்பப்படி புதிய புதிய கடவுள்களை ஏற்றுப் போற்றிக் கும்பிடுவது பயனளிக்காது. எனவே, மதமாற்றங்கள் எந்த ஒரு நன்மையும் தராது, பயனற்றது, தேவையற்றது என்ற பேருண்மை தெளிவாகிறது. எனவே, உலக மக்கள் அவரவரின் முன்னோர்கள்

பூசை செய்த கடவுள்களையே வாழையடி வாழையென வழிபட்டு வர வேண்டும். இதுதான் அருளுலக உண்மை. இந்த உண்மையின்படி உலக மக்கள் வாழ்ந்திட்டால் உலக ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு, உலக அமைதி, உலக அன்பு, உலக சகோதரத் தத்துவம் முதலியவை முளைத்துக் கிளைத்துச் செழித்தோங்கிடும்.

24) இவற்றைத்தான் சித்தர்கள் உலக மனிதகுல நன்மைக்காகவும், மேன்மைக்காகவும் அருளி யுள்ளார்கள். மேலும், சித்தர்களின் இந்துமதப்படி வீடு தோறும் பூசையறை, தெருக்கள் தோறும் கோயில்கள், ஊர்தோறும் எல்லைகளில் கோயில், நாடு தழுவிய பெரிய பெரிய கோயில்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

25) தனிமனித வழிபாடு, குடும்ப வழிபாடு, குலத்தார் வழிபாடு, ஊரார் வழிபாடு, நாட்டு மக்கள் வழிபாடு என்று ஐந்து வகைப்பட்ட வழிபாடுகளையே சித்தர்கள் அருளியுள்ளார்கள். எனவே, இந்து மதத்தில் எல்லா வகையான வழிபாடுகளும் இருப்பதை உணர்ந்து இந்துக்கள் இந்துமதத்தின் அருமை, பெருமை, அரிய பயன் முதலியவற்றை உணர்ந்து பெருமிதம் பெற வேண்டும்.

26) சித்தர்கள் தங்களின் இந்து மதத்தில் எட்டுத் திசைகள், கல், மண் அனைத்து வகையான பயிரினங்கள், உயிரினங்கள்.... முதலிய அனைத்தையும் வழிபாட்டுக்குரிய கடவுள்களாகவே அறிவிப்புச் செய்துள்ளார்கள். அது மட்டுமல்ல, இவைகளை வழிபடும் நெறிமுறைகளையும், பூசை விதிகளையும், பூசைக்குரிய படையல் பொருட்களையும் விவரித்துள்ளார்கள். இவற்றால் சித்தர்களின் கொள்கையும், கோட்பாடும்; நடைமுறைகளும் முழுமையானவை; எளிமை-யானவை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதாவது, சித்தர்களின் மதம் ஒரு முழுமையான மதம் என்பது புரிகிறது.

27) சித்தர்கள் பூசைமுறையிலும் முழுமையான செயல் சித்தாந்தத்தை அருளி யுள்ளார்கள்.

**i. திருமுறைப் பூசை:-** பத்தியாளர்கள், தங்களின்

பத்தியுணர்வில் தங்களையே மறந்து உணவு, உடை, உறையுள், பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்.... முதலிய அனைவரையும் மறந்து வாழ்வார்கள். எந்தவிதமான பூசை நெறியையும் பின்பற்றாமல் தங்களின் மனதுக்குத் தோன்றிய முறைகளில் எல்லாம் பூசை செய்வார்கள்.

ii. **தருமுறைப் பூசை**:- தங்களுக்குக் கிடைக்கக் கூடிய பயிரினங்களின் வேர், தண்டு, இலை, பூ, காய், கனி, கிழங்கு.... முதலியவைகளைக் கிடைக்கின்ற பசுமை மாறாமல் படைப்பதும், பக்குவமாகச் சமைத்தும் படைப்பதுமாக இரு வகைகளில் பூசை செய்வார்கள்.

iii. **கருமுறைப் பூசை**:- தாங்கள் உண்ணக் கூடிய உயிரினங்களைப் பலியிட்டும், சமைத்துப் படைத்தும் பூசை செய்வார்கள்.

iv. **குருமுறைப் பூசை**:- பத்தியாளர்களில் தாங்கள் உண்ணக் கூடிய உயிரினங்களை பலியிட்டும் சமைத்தும் பூசிப்பதை விட, பலர் தங்களுடைய விழியாக, வழியாக, வழி காட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக விளங்குகின்ற குருவையே கடவுளாக ஏற்றுக் கொண்டிடுவர். அதனால் குருவுக்குத் தொண்டு செய்வதையே கடவுளைப் பூசை செய்வதாகும் என்ற இருக்கு வேதக் கருத்தைச் செயலாக்கியே வாழுகின்றனர். இப்படி, நான்கு வகைப்பட்ட பூசைமுறைகளைச் சித்தர்கள் அருளியுள்ளார்கள்.

28) அண்டபேரண்டங்கள் ஆளும் மூலப் பதினெண் சித்தர்களின் அறிவிப்பின்படி அனாதிசிவன்களின் காலமான (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்து ஐயாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ஆண்டுகளில், தமிழ்மொழியும் இந்துமதமும் வளர்க்கப் படும் முயற்சியில் குமரிக் கண்டம் எனப்படும் இளமுறியாக் கண்டத்தில் பரவலாக ஆங்காங்கே, தமிழ்மொழியும், இந்துமதமும் சிறிய சிறிய அளவில் திட்டுத் திட்டாகத்தான் பரவின. எனவேதான் ஆதிசிவன் 1.பதினெண் சித்தர்கள், 2.பதினெட்டாம்படிக் கருப்புகள், 3.நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள், 4.நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள், 5. நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள்

எனும் விண்வெளி ஐவர் குழு என்ற குழுவுடன் இம் மண்ணுலகுக்கு வந்தார். அவர் இம்மண்ணுலக (பார் = உலகம், வதி = வாழ்பவர் => பார்வதி) மங்கையான பார்வதியை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்த மகனே முருகன். இந்த முருகனுக்கு இரு மனைவியர் தெய்வானை, வள்ளி இருந்தும் வாரிசு இல்லாததால்தான் பதினெண்சித்தர்களில் முதல்வரான சித்தர் கருவூரூர் பீடாதிபதியாகவும், மடாதிபதியாகவும் பொறுப்பேற்று வருகின்றூர்கள். எனவேதான், அண்ட பேரண்டங்களிலிருந்து அடுத்தடுத்து அருளாட்சிப் பணிக்குப் பொறுப்பாளர்களாக வந்திட்ட பல்லாயிரக் கணக்கான ஆதிசிவன்கள் பதினெண்சித்தர் பீடத்துக்கும் மடத்துக்கும் உரிய ஆதரவை நல்கி வருகின்றனர்.

29) அருதி சிவன்களின் காலங்களில் எண்ணூறுக்கும் மேற்பட்ட மதங்களும், மொழிகளும் இருந்திருக்கின்றன. இவற்ரேடு பதினெண் சித்தர்களின் தாய்மொழியும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியும், அண்ட பேரண்ட மதமான இந்துமதமும் போராடின. போராட்டம் நீடித்தது. அதில் ஒரு பெரிய திருப்பத்தைக் கொண்டு வர ஆதிசிவனுரும் விண்ணுலக ஐவரும் வந்தனர்.

30) ஆதிசிவனுரும், விண்ணுலக ஐவர்குழுவும் நான்கு யுகங்களுக்கு அருளுலக வெற்றியை அடையத் திட்டமிட்டனர். இத்துடன் மூன்று யுகங்களும் முடிந்து நான்காம் யுகம் பிறந்து (**கி.பி. 1997இல்**) 5098 வருடங்கள் ஆகின்றன.

முதல் யுகமான கீரன் யுகம் - 17,28,080 ஆண்டுகள்

இரண்டாவது யுகமான தீரன் யுகம் - 12,90,000 ஆண்டுகள்

மூன்ருவது யுகமான தூரன் யுகம் - 8,64,000 ஆண்டுகள்

நான்காவது யுகமான கலியன் யுகம் - 5,098 ஆண்டுகள்

எனவே, இம்மண்ணுலகம் (கி.பி.1997க்குப் பின்) இன்னும் கலியுகம் (4,32,000 - 5,098 = 4,26,002) நான்கு இலட்சத்தி இருபத்து ஆருயிரத்து இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. இந்தக் காலக்கெடுக்குள் எல்லாம் நிறைவேறி இம்மண்ணுலகு விண்ணுலகச் சாதனைகள் மூலம் முழுமை பெற்றிடும்!

31) இதற்காகத்தான் அனைத்து வகைப்பட்ட கடவுள்களின் மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் ... முதலிய அனைத்துப் பூசைமொழிகளும் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுபோல் **வேறு எந்த மொழிகளிலும் காயந்திரிகள் இல்லை.** இவற்றில் முதன்மையான சில காயந்திரிப் பூசை மொழிகள் இந்நூலின் இறுதியில் வெளியிடப் படுகின்றன. இவற்றின் அரிய பயன்களை அநுபவப் பூர்வமாக உணர்ந்து கொள்ளலாம். அதாவது, 1. குடும்ப ஆண்டவர், 2. குலதெய்வங்கள், 3. ஊர் தேவர் தேவதைகள், 4. நாட்டுக் கடவுள்களர்கள் என்று நான்கு வகைப்பட்ட அருளுலகத்தவர்கள் இருக்கிறார்கள் என்ற பேருண்மை தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேத நூல்களிலும், இந்து மத நூல்களிலும்தான் இருக்கின்றன. இவற்றை அநுபவப் பூர்வமாக உணரும் ஆற்றல் தமிழ் மொழி கற்ற தமிழர்களாகிய இந்துக்களுக்கு மட்டுமே அதிகமாக இருக்கிறது.

32) இக் கலியுகத்தில் கரு-வழியாக, குருவழியாகத் தயாராகிடும் பத்தியாளர் மட்டுமே ஓதி உணர்வதற்கென்று 1. ஓமம், 2. ஓகம், 3. யாகம், 4. யக்ஞம், 5. வேள்வி மூலம் ஐந்தீ வேட்டல் பூசை முறையும் எல்லா வகைப் பாதிப்புக்களையும் அகற்றித் தருவதற்காக இன்றைக்கு எல்லா மக்களும் அநுபவிக்க வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப் படுகின்றன.

33) இப்படி உலக மக்களின் நலத்திற்காக, வளத்திற்காக, மேம்பாட்டிற்காக அருளுலக உண்மைக் கதைகள்.... தீவிரமாக குருவழிக் கல்வி மூலம் பதினெண் சித்தர் மடத்தில் பீடத்தில் அருளப் படுகின்றன. ஆதிசிவனார் உலகில் மொழிச்சண்டை, மொழிப்போர்; இனச்சண்டை, இனப்போர்; மதச்சண்டை, மதப்போர் எனப் படுபவைகள் எல்லாம் தடுத்து நிறுத்தி, அமைதிப்படுத்திட அருளுலகப் பேருண்மை ஒன்றினை (படம் வரைந்து) சித்திரம் தீட்டி விளக்கி உள்ளார் ஆதிசிவனார்.



இதனையே பதினெண் சித்தர்களும், 48 வகைச் சித்தர்களும் தங்கள் தங்களால் இயன்ற வரை வலியுறுத்தி வெளியிட்டு வருகிறார்கள். இதற்கு 'மஞ்சள் முக்கோண சத்தி பீட விளக்கம்' என்று பெயரிட்டு குறிப்பிடு-கின்றனர் சித்தர்கள். அதாவது இந்த முக்கோணச் சித்திரத்தின் மூலம், கடவுள் எனப்படுபவர் (இங்கு கடவுள் என்ற சொல் ஆண்டவர், தெய்வம், தேவர், தேவதை என்ற அனைவரையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகப் பயன்படுத்தப் படுகிறது) நாடு, மொழி, இனம் எனும் முக்கோண எல்லைக்குள் இருப்பவரேயாகும். எனவே, எந்த மொழியைச் சேர்ந்த கடவுளையோ, இனத்தைச் சேர்ந்த கடவுளையோ யாரும் எல்லா மொழியினருக்கும், எல்லா இனத்தவருக்கும், எல்லா நாட்டவருக்கும் உரிய பொதுக் கடவுள் என்று கூற முடியாது; கூறக் கூடாது; கூறுவது தவறு ஆகும்.

34) இன்றைக்கும் ஒவ்வொரு மதமும், மதத்திற்கு உரிய கடவுளுக்கென்று குறிப்பிட்ட ஒரு மொழியையே தமது கடவுளது மொழி என்று கூறுகிறது. அம் மொழி வழியாகத்தான் தமது கடவுளர்களுக்கு பூசை செய்ய வேண்டும் என்று மதத் தலைவர்களும், குருமார்களும், சாத்திரியார்களும், பூசாறிகளும் கூறுகிறார்கள். அதாவது ஒவ்வொரு மதத்திற்கும் பூசை செய்யப் பயன்படுத்தும், பூசை செய்யக் கூடிய மொழிகள் என்று ஒரு குறிப்பிட்ட மொழியைத்தான் விரும்புகிறார்கள், நம்புகிறார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள். அம்மொழி வழியாகத்தான் அவரை வணங்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். இக் கருத்தைத்தான் எல்லா மதத் தலைவர்களும் குருமார்களும் சாத்திரியார்களும் பூசாறிகளும் கூறுகின்றனர்.

35) இரண்டாவதாக ஒவ்வொரு மதத்திற்குரிய கடவுள்களும், ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு மட்டுமே உரியவர் என்று கூறுகிறது. அதாவது, ஒவ்வொரு மதத்திற்கும் உரிய மூல அல்லது முதல் கடவுள் அல்லது தலைமையான கடவுள் ஒரு குறிப்பிட்ட இனத்தில் உள்ள ஒருவரைத் தமது வாரிசாக, தமது பதிலியாக, தமது தூதுவராக, மகனாக, .... தேர்ந்தெடுத்து அருட்செல்வங்களை மக்களுக்கு

வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட இனத்தார்தான் அந்த மதத்தின் மேலாண்மையாளராக செயல்பட்டு வருகின்றார்கள். மேலும் இந்த இனத்தவர்களுக்கு உரிய உணவு வகைகள், உடை வகைகள், அணிகலன் வகைகள், இசைக் கருவிகள்.... முதலியவைகளை ஏற்றுக் கொள்பவராக நடை முறையில் சமயச் சட்டம் இருக்கின்றது. இதை இன்றைக்கும் வழக்கத்தில் காணுகிறோம். அதாவது ஒவ்வொரு மதத்தினருக்கும் தமது மதத்துக்-கென தேர்ந்தெடுக்கப் பட்ட குறிப்பிட்ட வகைக்கு உரிய அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் பெற்று வாழுகிறார்கள். எனவே, கடவுள் என்ற பொதுச் சொல் குறிக்கின்ற அனைத்து அருளுலகத்தவர்களும் அவரவருக்கென்ற அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் பெற்றுள்ளார்கள். இந்த அகப்பண்பாடும், புற நாகரீகமும் ஒவ்வொரு இனத்துக்கும் தனியாக இருக்கின்றன. எனவேதான், குறிப்பிட்ட கடவுள், குறிப்பிட்ட இனத்துக்கே உரியவராகிறார். அதாவது கடவுள் என்பவர் இனப்பற்றும், மொழிப்பற்றும், பண்பாட்டுப் பிடிப்பும், நாகரீகத் துடிப்பும் உடையவராகவே விளங்குகின்றார் என்ற பேருண்மை விளக்கமாகின்றது.

36) ஒவ்வொரு மதமும், தனது மதத்தைத் தோற்றுவித்த மூலவர், தலைவர் பிறந்து வளர்ந்த நாட்டையே புனித இடமாக, கடவுள் வாழும் இடமாகக் கருதுகிறார்கள். அதாவது, ஒவ்வொரு மதமும், ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கே உரியதாகக் கருதப்பட்டு வருகிறது. அதற்காகத்தான் ஒவ்வொரு மதமும் தங்களது மூலவர் அல்லது தலைவர் பிறந்த நாட்டிற்கு புனிதப் பயணம் சென்று வருகிறார்கள். இதன்படிப் பார்த்தால் ஒவ்வொரு கடவுளும் ஒவ்வொரு நாட்டுக்கு உரியதாகக் கட்டுப்பட்டு வாழுகின்றது என்ற பேருண்மை விளங்குகின்றது.

37) எனவே, ஒவ்வொரு கடவுளும் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கும் அந்த நாட்டின் குறிப்பிட்ட இனத்தாருக்கும், அந்த இனத்தாரின் அகப்பண்பாட்டிற்கும், புறநாகரீகத்திற்கும், மொழிக்கும்

கட்டுப்பட்டவராகவே இருக்கின்ருர் என்ற பேருண்மை தெளிவாகின் -றது. இதேபோல் ஒவ்வொரு குறிப்பிட்ட கோயிலிலும், குறிப்பிட்ட மொழியில் பூசை செய்வதும், குறிப்பிட்ட இசைக் கருவிகளை இசைப்பதும், குறிப்பிட்ட உணவு வகைகளை படைப்பதும், குறிப்பிட்ட உடைவகைகளை அணிவிப்பதும், குறிப்பிட்ட அணிகலன்களை அணிவிப்பதும் மக்களிடையே நிலையான இடத்தைப் பெற்று விட்டன. இது மட்டுமல்லாமல் ஒவ்வொரு மதத்திற்கும் என்று தனிப்பட்ட திருநாள்களும், திருவிழாக்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு நடைமுறையில் செயலாகி வருகின்றன.

38) எனவே, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற முழக்கம் தவருனது, பிழையானது, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது ஆகும். கடவுள்கள் காலங்கள் தோறும் அண்ட பேரண்டங்களில் இருந்து வருபவர்களாகவும், இம் மண்ணுலகிலே கணிசமான அளவு கடவுள்கள் பிறக்கின்ருர்கள், தோன்றுகின்ருர்கள் என்பதே உண்மை! நான்கு வேதங்களிலும் கடவுளர்கள் 8,84,736 வகையினர் என்று குறிக்கப் படுகிருர்கள். அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகிற்கு வந்து நிலையாக இம் மண்ணுலகிலேயே தங்கியவர்கள்,

i. 33,000 கோடி தேவர்கள்,

ii. 48,000 கோடி இருடிகள்

iii. 1,000 கோடி தேவதைகள்

iv. 96,000 கோடி கணங்கள்

v. 108,000 கோடி முனிவர்கள்

எனும் மண்ணுலக ஐவர் குழு ஆகும்.

39) சித்தர்கள் இம்மண்ணுலகில் மானுடர் அருட்செல்வங்களைப் பெறுவதற்காக 108 வகைப்பட்ட திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைப்பட்ட சீவாலயங்கள் என்று மொத்தம் 1359 வகைப்பட்ட வழிபடு நிலையங்களை உண்டாக்கி யிருக்கிருர்கள்.

40) சித்தரியல் அல்லது சித்தரிசம் என்ற கோட்பாடும், செயல்பாடும் வாழையடி வாழையாக பல நூருயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றன. இதற்குக் காரணம்,

i. சித்தர்கள் சொற்கோயில்களை (நூல்களை) உருவாக்குவதுடன் எண்ணற்ற கற்கோயில்களையும் உருவாக்கி வருகிறார்கள்.

ii. சித்தர்கள் நூல்களை மட்டும் எழுதாமல் அவற்றை மக்கள் விரும்பிப் படிக்கும்படிச் செய்யக் கூடிய ஆள்களையும் உருவாக்கி வருகிறார்கள்.

iii. சித்தர்கள் மிகுதியாக உரைநடை நூல்களையும், குறைந்த அளவு கவிதை நடை நூல்களையும் எழுதி இருக்கிறார்கள். எனவேதான், சித்தர்களின் இலக்கியப் படைப்புக்கள் அனைத்தும் காலங்கள் தோறும் கருத்துப் புரட்சியையும், சிந்தனைச் செழிச்சியையும், அருளாட்சியையும் விளைவித்துக் கொண்டே இருக்கின்றன.

iv. சித்தர்கள், எல்லா வகைப் பட்ட கோயில்களிலும் உள்ள எல்லா வகைப் பட்ட கடவுளர்களையும் காலங்கள் தோறும் வழிபட்டு பத்தி செய்து சத்தி, சித்தி, முத்திகளைப் பெற்றிட வழிவகைகள் செய்கிறார்கள்.

41) இவற்றையெல்லாம் இந்தக் கலியுகத்தில் மீண்டும் மீண்டும் மக்களிடையில் செயலாக்கம் பெறுமாறு செய்திட இன்றைய பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார் ஞானாச்சாரியார் அவர்கள் அரும்பாடு பட்டு பல்லாயிரக் கணக்கான சித்தர்களை உருவாக்கியுள்ளார்; இன்று மேன்மேலும் சித்தர்களை உருவாக்கிக் கொண்டுள்ளார். எனவே, சித்தர்களை ஒன்று கூட்டி சித்தரியம், சித்தரியல் எனப்படும் அருளுலக வாழ்வியல்களை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சி மீட்சியையும் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகவே சித்தர்கள் மாநாடு கூட்டப் படுகிறது.

42)

i. சித்தர்கள் ஞானம், அகஞானம், புறஞானம், விஞ்ஞானம், மெய்ஞ் ஞானம் என்று அறிவியல்களையும், அருளியல்களையும் ஐந்து பெரும் வகையாக அருளியுள்ளார்கள்.

ii. ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றும் பற்றிக் கூறியுள்ளவையாகவும்,

iii. உடற் கூறுகள் பற்றி மருத்துவத் துறைக்கு அருளியுள்ளவை - யாகவும்,

iv. இலக்கியத் துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

v. வரலாற்றுத் துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

vi. உயிரியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

vii. பயிரியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

viii. மண்ணியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

ix. விண்ணியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்

என்று இப்படி சித்தர்கள் அருளியுள்ளவைகளைத் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து உணர்ந்து செயலாக்கிட வேண்டும் என்பதற்காகவே இன்று வாழும் பதினெண் சித்தர் பீடாதிபதி மடாதிபதி சித்தர் கருவூரூர் அவர்கள் இந்தச் சித்தர்கள் மாநாட்டைக் கூட்டுகிறூர்.

இந்த மாநாட்டின் அடிப்படையில் தொடர்ச்சியாகத் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் சித்தர்கள் மாநாடு கூட்டப்பட வேண்டும். அப்போதுதான் இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா மாநிலங்களிலும் சித்தர்கள் மாநாட்டைக் கூட்ட முடியும்! அதன்பிறகு, இந்திய நாடு முழுவதும் தழுவிய சித்தர்கள் மாநாட்டைக் கூட்ட முடியும்! கூட்ட வேண்டும்! இவற்றை யெல்லாம் முடித்த பிறகுதான் உலக நாடுகளின் இணைப்பாக, ‘உலகச் சித்தர்கள் மாநாடு’ என்று ஒன்றினை கூட்டப்பட வேண்டும், கூட்டப்பட முடியும்.

43) இப்படி, படிப்படியாக பலநிலைகளில் சித்தர்கள் மாநாடு கூட்டப்பட இருக்கின்றன. இம்முயற்சிக்கு முதல் கட்டமாக, ஆரம்பமாக, அருளாட்சி திருநகரான மாமூதூர் மதுரை மாநகரில் சித்தர்கள் மாநாடு கூட்டப் படுகின்றது.

இந்த அளவில் இன்றைக்கு நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து அருளாட்சிப் பணி புரியும் ஞாலகுரு குருமகா சன்னிதானம் அரசயோகி ஞானாச்சாரியார் சித்தர் கருவூரூர் எல்லோரையும் சித்தர்களாக்கிட கருத்து விளக்கங்களை அருளி நிறைவு செய்கிறூர்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

***மூலம்: அச்சிட்ட புத்தகம்***

# சுற்றறிக்கை மூலம் 2010 ஏப்ரல் (சித்திரை) மாதம் முதல் 2013 சனவரி (தை) மாதம் வரை வெளியிடப் பட்ட கட்டுரைகளின் பட்டியல்

***2010 ஏப்ரல்*** - ஞானச்சாரியார் வரலாறு கட்டுரைகள்.

***2010 மே*** - எங்களைச் சந்தித்தால், அருளாட்சி அமைப்புப் பணி குருவாக்கியங்கள், குருதேவரின் அருட்பட்டங்கள்.

***2010 சூன்*** - அருளுலக அறிமுக அறிவுரை அஞ்சல் 10வது இ.ம.இ. மாநாட்டு மலர்.

***2010 சூலை*** - 1982இல் ம.பொ.க. அடியான்களுக்கு குருதேவரின் உரை, மண்ணுக்குரைத்த மண்டல வாசகங்கள்.

***2010 ஆகசுட்டு*** - தந்தை பெரியாருக்குப் பின் பகுத்தறிவுப் பணியின் நிலை, பெரியார் சொல்லடி நாயனர், சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா. இந்துமதம் பற்றிய குருபாரம்பரிய வாசகம், அருட்போர் பற்றிய விளக்கம்.

***2010 செப்டம்பர்***- தமிழர் மதமே இந்துமதம் கட்டுரை (வைத்திலிங்கத்திற்கு எழுதியது), வேடசந்தூர் பரஞ்சோதி மகானுக்கு எழுதிய விளக்க அஞ்சல், ஆயுதப் புரட்சியல்ல, காகிதப் புரட்சி, சில குருபாரம்பரிய வாசகங்கள்.

***2010 அக்டோபர்*** - அருட்படை வியூக அமைப்புச் சிந்தனை ஓலை (அழகுமலைப் பிள்ளைக்கு எழுதியது), 2வது முப்பெரு விழா முயற்சிப் பணிக் கருத்தோவியங்கள், இ.ம.இ., அ.வி.தி. அருளாட்சி அமைப்புப் பணி அழைப்பு.

***2010 நவம்பர்*** - முத்தமிழ் விளக்கம்; சித்தரடியான் சத்தியமூர்த்திக்கு எழுதிய அஞ்சல்; பெரி.முத்தையா-வுக்கு எழுதிய விளக்க

அஞ்சல்; சித்தர்களின் ஏட்டில் குருதேவர் பற்றிய குறிப்பு; அன்புச் சேவுக!; 1995 பொங்கல் வாழ்த்துச் செய்தி

***2010 டிசம்பர்*** - மார்கழி மாதம் பீட மாதம், தை மாதம் சிறப்புக்கள், 10வது பீடாதிபதியின் குருபாரம்பரியம்: ஆரியர்கள் செல்வாக்கு பெற்ற விதம், சில அரிய சித்தர் நெறித் தத்துவங்கள், ஆங்கிலப் புத்தாண்டு கவிதை

***2011 சனவரி*** - காயந்திரி மந்தரம் - கட்டுரைகள்

***2011 பிப்ரவரி*** - சிவபுராணம், சத்தி காயந்திரிகள், கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம், காயந்திரிகளைப் பயன்படுத்தும் முறை, சிவராத்திரி பற்றிய சுருக்க விளக்கம், சீவகாயந்திரி மந்தரம், கடவுள் தமிழ், தெய்வத் தமிழ், தேவத் தமிழ்.

***2011 மார்ச்சு*** - கொள்கை விளக்கம் புத்தகத்திலிருந்து பல கட்டுரைகள், குருமாரியம்மன் காயந்திரி

***2011 ஏப்பிரல்*** - கோயில் ஒழுங்கு புத்தகம், அன்புச் சேவுக - அரசியலுக்கு உட்பட்டது மதமா? மதத்துக்கு உட்பட்டது அரசியலா?, தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? புத்தகத்திலிருந்து சில பகுதிகள்.

***2011 மே*** - ஆதிசங்கரர் வரலாறு, தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? புத்தகத்திலிருந்து ஆதிசங்கராச்சாரியார் பற்றிய குருபாரம்பரிய வாசகங்கள்.

***2011 சூன்*** - ஆதிசங்கரர் பற்றிய கட்டுரைகள் தொடர்ச்சி, சித்தரடியான் நிலை விளக்கம், தமிழர்கள் மறு சிந்தனைக்கு... அ.வி.தி. மையம் அமைப்பது பற்றி விளக்கம், ஏசுநாதர் வரலாறு

***2011 சூலை*** - மெய்யான இந்துமதமும், பொய்யான ஹிந்துமதமும் - தமிழர்களின் மறுசிந்தனைக்கு என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்ட மெய்யான இந்துமதமும் பொய்யான

ஹிந்து மதமும் என்பதைப் பற்றிய விளக்கங்கள்

***2011 ஆகஸ்ட்டு*** - ஆதிசிவனுர் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் - முதல் பகுதி

***2011 செப்டம்பர்*** - ஆதிசிவனுர் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் - இரண்டாம் பகுதி

***2011 அக்டோபர்*** - ஆதிசிவனுர் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் - மூன்றும் பகுதி

***2011 நவம்பர்*** - ஆதிசிவனுர் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் - நான்காம் பகுதி

***2011 டிசம்பர்*** - ஆதிசிவனுர் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் - இறுதிப் பகுதி, சித்தர்களும் அவர்கள் தொடர்பான கருவறைகளும், தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்?

***2012 சனவரி*** - சித்தர் இராமாயணம் - முன்னுரை, தமிழர் மதமே இந்துமதம் (ஆறு சமயங்களும் பன்னிரண்டு இராசிகளும், இராசிபயன்)

***2012 பிப்ரவரி*** - யமுனையாற்றங்கரைப் பாரதப் போரும், காவிரியாற்றங் கரைப் பாரதப் போரும் - கட்டுரை; மதுரையின் அழிவு; என்றைக்குமுரிய அரச பாரம்பரியம்,

***2012 மார்ச்சு*** - சைவ சமயமே சித்தர் நெறி - கட்டுரையின் ஒரு பகுதி

***2012 ஏப்பிரல்*** - சைவ சமயமே சித்தர் நெறி - கட்டுரையின் மறுபகுதி; 1972இல் எழுதிய தொல்காப்பியத்தில் உலகின் தோற்றமும், உயிரின் வளர்ச்சியும்

***2012 மே*** - பதினெட்டு அருளாட்சி ஆணைகள் - முதல் பகுதி

***2012 சூன்*** - பதினெட்டு அருளாட்சி ஆணைகள் - மறு பகுதி

***2012 சூலை*** - அருளாட்சி ஆணைகள் முடிவுரை; தஞ்சாவூர், சோழபுரம் ஊர்கள் தோன்றிய வரலாறு, அச்சிட்ட அறிக்கை வழங்கு

முறை; பன்னிரு திருமுறைகள் தோன்றிய வரலாறு; நகராக்களின் முழக்கமே இந்துமத எழிச்சி; தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றி அரசினர்க்கு அருளுலக அறிவிப்பு

***2012 ஆகஸ்ட்டு*** - இ.ம.இயக்க விளக்கச் சுருக்கம்; அருளாட்சி அமைப்புப் பணி விளக்கத் திருவோலை

***2012 செப்டம்பர்*** - தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் கொள்கை விளக்கம்; இ.ம.இ. வீரமுழக்கங்கள்; கடவுள்தமிழ், தெய்வத் தமிழ், தேவத் தமிழ் புத்தகம்; 10வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம்.

***2012 அக்டோபர்*** - தமிழருக்கு மட்டும் தாழ்ச்சியேன்; தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்?; தமிழின விடுதலையே உலக ஆன்மீக விடுதலை; மெய்யான இந்துமதத்தைப் புரிந்து பயனடையுங்கள்

***2012 நவம்பர்*** - ஐயப்பன், ஐயனார் வழிபாடுகள் பற்றிய கட்டுரைகள்.

***2012 டிசம்பர்*** - சித்தர்கள் மாநாடு பாகம் 1; பாகம் 2 ஒரு பகுதி; நான்கு வகைப் பீடாதிபதிகள், எண்வகை ஆச்சாரியார்கள் மரபு.

***2013 சனவரி*** - சித்தர்கள் மாநாடு பாகம் 2 முடிவுப் பகுதி; மாதாமாதம் வெளிவரும் இந்தச் சுற்றறிக்கை மூலம் இதுவரை வெளி வந்துள்ள கட்டுரைகளின் பட்டியல்.

**2010 மே மாதத்தில் வெளி வந்துள்ள “எங்களைச் சந்தித்தால்...” என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ள கருத்துச் சுருக்கங்களுக்கு ஏற்ப எந்தெந்த கருத்துக்களை எந்தெந்த மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளின் மூலம் விளக்கமாகப் பெறலாம் என்பதை அடுத்து வரும் பத்திகளில் காணலாம்.**

**எல்லா மாத இதழ்களும் கையில் இல்லாதவர்கள் தமிழிலேயே உள்ள www.newsletters.gurudevar.org என்ற வலைத்தளத்தினைப் பார்த்துப் படித்து அறிந்து கொள்ளலாம்.**

# எங்களைச் சந்தித்தால்.....?!?!?! கொள்கை விளக்க முழக்கங்கள்

1. இந்துமதம் பற்றிய பேருண்மைகளைப் புரிந்து கொள்ளலாம். ***(எல்லா அறிக்கைகளும்)***
2. இந்துமதத்தில் உள்ள ஆபாசங்கள், ஏமாற்றுகள், மூடநம்பிக்கைகள், சுரண்டல்கள், காட்டுமிராண்டித் தனங்கள், பழக்க வழக்கங்கள், ... முதலிய அனைத்தையும் அகற்றிட இந்துமதத்தைத் தோற்றுவித்த வாரிசு வந்திருக்கிறார். இந்துமதத் தந்தையாகப் பொறுப்பேற்றிருக்கும் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதியே மேற்கண்ட தவறுகளையும், குறைகளையும் நீக்க வந்திருக்கிறார். வாரீர்! வாரீர்! வாரீர்! ***(2010 மே)***
3. இம் மண்ணுலகில் தோன்றியுள்ள அனைத்து மதங்களுக்கும் மூலமதமாக, முதல்மதமாக தாய்மதமாக இருக்கின்ற தமிழர்களின் மெய்யான இந்துமதத்துக்கு மத வெறி கிடையாது. மதப் பொறுமை கிடையாது, கிடையாது. எனவேதான், இந்து மத மறுமலர்ச்சியின் மூலம்தான் உலக மதங்களை இணைக்க முடியும். பிணைக்க முடியும். ***(2010 சூன்)***
4. இந்துமதத்தின் பெயரால் இசுலாம், கிறித்துவம், புத்தம், சமணம் போன்ற மதங்களைத் தாக்குவது தவிர்க்கப் படும். ***(2010 சூன்)***
5. மதச் சண்டைகளை வளர்க்கும் ஆரிய வேதமதத்தின் முகத்திரை கிழிக்கப்படும். ***(2010 சூன்)***
6. சாதிவெறிகளைத் தூண்டிவிடும் ஆரிய வேதமதத்தின் சதித் திட்டங்கள், சூழ்ச்சிச் செயல்கள் அம்பலமாக்கப் படும். ***(2010 சூன், 2011 ஏப்பிரல்)***
7. இந்துமதம்தான் தமிழருடையது! ஹிந்துமதம் ஆரியருடையது. இப் பேருண்மைகளைப் புரிய வாரீர்! ***(2011 சூலை)***
8. மெய்யான இந்துமதப்படி தமிழினத் தந்தை பெரியார்

ஈ.வெ.ரா. 64வது சொல்லடி நாயனுராக அறிவிக்கப்பட்டிருக்கிருர். விவரங்களே அறிய வாரீர்! ***(2010 ஆகசுட்டு)***

9. மெய்யான இந்துமதப் படி மேலேய நாட்டு கம்யூனிசச் சித்தாந்தத் தந்தை கார்ல்மார்க்சு நவநாத சித்தராக அறிவிக்கப் பட்டிருக்கின்ருர். ***(2010 சூன்)***

10. 'காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழரே' என்ற பேருண்மையைத் தெரிந்து கொள்ள வாருங்கள். ***(2011 மே, சூன்)***

11. இளமுறியாக் கண்டத்தில் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னுல் உருவாக்கப் பட்ட இந்துமதத்தால்தான் தமிழினத்திற்கு தன்மானத்தையும், தன்னம்பிக்கையையும், சுயமரியாதையையும், பெருமையையும் மீட்டுத் தரமுடியும். ***(2012 சனவரி, பிப்ரவரி)***

12. தமிழன் தன்னேப் பாதுகாக்கக் கூடிய இந்துமதத்தைத் துறந்ததாலும், மறந்ததாலும்தான் உலகெங்கும் பழியையும், இழிவையும் அடைகின்ருன். எனவே, தமிழன் தன்னுடைய இந்துமதத்தைப் புரிந்து ஏற்றுக் கொள்வதின் மூலம்தான் மீண்டும் தமிழினம் ஒற்றுமையும், வலிவும், ஆட்சியும் உருவாக்க முடியும். ***(2011 ஏப்பிரல்)***

13. இந்துமத மறுமலர்ச்சி மூலம்தான் தமிழனுக்கு மொழி உணர்வையும் ஊட்ட முடியும்! ஊட்டமுடியும்! ஊட்டமுடியும்! ***(2011 சனவரி)***

14. பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் தமிழ் மொழியையும், தமிழர்க்குரிய வரலாற்றையும், தமிழரின் மெய்யான இந்துமதத்தையும் எப்படி யெல்லாம் சிதைத்துச் சீரழித்துள்ளார்கள் என்பதையும்; மறைத்துத் திரித்துள்ளார்கள் என்ற விவரங்களேயும் தெரிந்து கொள்ளுங்கள். ***(2010 செப்டம்பர், அக்டோபர், டிசம்பர்)***

15. குவலய குருபீடம் இந்துமதத்தின் குறைகளேயும், கறைகளேயும் முறையாக நிறையாக விளக்கிட

முன்வந்துள்ளார். *(2010 நவம்பர்)*

16. ஞானச்சாரியார், இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கு பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஈ.வெ.ரா.வை கௌரவத் தலைவராக அறிவித்துள்ள புரட்சிக் கருத்துக்களை கேட்க வாருங்கள். *(2010 சூன், 2010 ஆகஸ்ட்டு)*

17. பன்னிரு திருமுறைகள், சாத்திரங்கள் தோன்றிய வரலாற்றை தெரிந்து கொள்ள வாருங்கள். *(2012 சூலை)*

18. தமிழினமே! உனக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களைப் போக்கிக் கொள்ள சித்தர்களுடைய இந்துமதம்தான் வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்க முடியும்! இப்பேருண்மைகளைப் புரிந்து கொள்ளுங்கள். *(2012 மே, சூன், சூலை)*

19. தமிழகத்திலுள்ள அனைத்து வகையான இயக்கங்களும் தமிழர்களை ஒற்றுமைப் படுத்துவதில் தோல்வி கண்டு விட்டன. தமிழர்களின் உரிமைகளையும், பெருமைகளையும் மீட்டுத் தருவதில் தோற்றுப் போயின. எனவே, தமிழர்களே விழிச்சி பெறுங்கள். எழுச்சி பெறுங்கள்! உங்களுக்கு வழிகாட்ட வந்திருக்கும் தமிழின குலகுரு, தமிழினத் தலைவர், தமிழ்மொழித் தலைவர், தமிழ்ப் பண்பாட்டுத் தலைவர், குவலய குருபீடம், ஞானச்சாரியாரை சந்திக்க வாருங்கள். அருளுலக, பொருளுலகச் சிக்கல்களைப் போக்கிக் கொள்ளுங்கள். *(2012 மே, சூலை)*

20. கடவுள் மனிதனாக வருவான் என்று காத்திருக்கத் தேவையில்லை. மனிதர்களையே கடவுளாக மாற்றும் சித்தர்களின் இந்துமதத்தினைத் தெரிந்து கொள்ள வாருங்கள். செயல்பட வாருங்கள். *(2012 டிசம்பர்)*

21. வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளாரின் மெய்யான வரலாற்றை அறிந்து கொள்ள வாருங்கள். *(இது வரை வெளியிடவில்லை)*

22. வடஆரியர்களின் பொய்யான ஹிந்துமதத்திலிருந்து விடுபட வாருங்கள். *(2012 மார்ச்சு, ஏப்பிரல்)*

23. நாயன்மார்கள், ஆழ்வார்கள், மௌன குருக்கள், மௌன சாமிகள், தாயுமானவ சாமிகள், தாயுமானவ அடிகள், பட்டினத்தார்கள், அருணகிரியார், மற்ற பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள்... முதலியவர்களின் மெய்யான வரலாற்றைத் தெரிந்து கொள்ள வாருங்கள். *(2012 டிசம்பர்)*

24. தேவகுமாரன் ஏசா - ஈசா பற்றிய பேருண்மைகளை அறிந்து கொள்ள வாருங்கள். *(2011 சூன், 2012 டிசம்பர்)*

25. தமிழரின் மதமான இந்துமதம் ஈன்றெடுத்தவையே உலக மதங்கள் என்ற பேருண்மையை உணர்த்திக் கொள்ள வாருங்கள். *(2010 சூன்)*

26. காணுகின்ற கோயில்களின் மெய்யான தத்துவ விளக்கங்களைக் காண வாருங்கள். *(2011 ஏப்பிரல், 2012 சூலை)*

27. 'சித்துக்களை அத்தவர்களே சித்தர்கள்' என்ற தத்துவத்தை உணர வாருங்கள். *(2011 டிசம்பர்)*

28. இந்துமதம் அக வாழ்க்கைக்கும், புற வாழ்க்கைக்கும் எப்படி யெல்லாம் பயன்படும் என்பதைப் புரிந்து கொள்ள வாருங்கள். *(2011 பிப்ரவரி)*

29. அருளை அநுபவப் பொருளாகப் பெறும் வழிமுறைகளை அறிந்து கொள்ள வாருங்கள். *(2011 சனவரி, பிப்ரவரி)*

30. மனிதர்கள் கடவுள்களாக மாறியதே மெய்யான இந்துமதம் என்ற பேருண்மைகளைப் புரிந்து கொள்ளுங்கள். *(2012 நவம்பர்)*

31. போலியான மதமறுப்பும், வெறுப்பும், காலியான கூலி வாழ்க்கையைத்தான் தரும் என்ற பேருண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்! வாருங்கள்! *(2012 மே, சூன்)*

32. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்ற தத்துவப் பசியைத் தீர்த்துக் கொள்ள வாருங்கள்; ஆன்மீகத் தாகத்தைத்

தணித்துக் கொள்ள வாருங்கள். *(2012 மே, சூன்)*

33. பழம்பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும் பற்றிய பேருண்மைகளைப் புரிந்து கொள்ள வாருங்கள். *(2011 சனவரி, பிப்ரவரி)*

34. இப் பிறப்பினை அடக்கி ஆள்கின்ற நாள், கோள், மீன், இராசிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வாருங்கள். *(2012 சனவரி)*

35. தமிழினத்துக்குரிய ஆயகலைகள் 64ஐயும் அருட்கலைகள் 48, ஏனைய கலைகளான கடவுட் கலைகளையும், தெய்வீகக் கலைகளையும், பேய்க் கலைகளையும், தேய்கலைகளையும் அறிந்து கொள்ள வாருங்கள். *(இதுவரை வெளியிடவில்லை)*

36. தமிழன் கண்டுபிடித்த மனையடி சாத்திறங்கள், அங்கவியல், வரியியல் சாத்திறங்கள் அறிந்து கொள்ள வாருங்கள். *(இதுவரை வெளியிடவில்லை)*

37. உருவ வழிபாட்டைக் கூறும் மெய்யான இந்துமதத்தையும், அருவ வழிபாட்டைக் கூறும் பொய்யான ஹிந்துமதத்தையும் அறிந்து கொள்ள வாருங்கள். *(2011 சூலை)*

38. தமிழர்களை வீழ்த்தித் தாழ்த்தி வைத்திருக்கும் பொய்யான ஹிந்து மதத்திலிருந்து தமிழர்களை விடுவிக்க மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்ய வாருங்கள். *(2011 ஆகசுட்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்)*

39. உங்கள் ஒவ்வொருவரையும், உண்மையான அருளாளராக உயர்த்துவதற்குரிய வழிவகைகளைச் சொல்ல வந்திருக்கும் ஞாலாச்சாரியாரைச் சந்திக்க வாருங்கள். *(2011 பிப்ரவரி)*

40. தமிழர்களே! "கடைவிரித்தோம்! கொள்வாரில்லை" என்ற நிலை இராமலிங்க அடிகளாருக்கு ஏற்பட்டது போல் இனியும் ஏற்பட வேண்டாம்! சிந்தியுங்கள். செயல்பட வாருங்கள்! *(2012 அக்டோபர்)*

41. இந்துமதத் தந்தை குருதேவரின் அருளை மருந்தாகவும், விருந்தாகவும்

பெற்றுக் கொள்ள வாருங்கள். ***(2012 டிசம்பர்)***

42. கண்மூடித்தனமான பிருமண எதிர்ப்பினுல் தமிழினத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

43. காட்டுமிராண்டித் தனமான மதவிமர்சனத்தால், தமிழினத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

44. நாத்திக வாதத்தால் தமிழினத்திற்கு மறுவாழ்வு இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

45. போலியான தமிழ்த் தொண்டினுல் போராட்டங்களால் தமிழினத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

46. இந்துமத இலக்கியங்களே இழித்தும், பழித்தும் பேசுவதால் தமிழினத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

47. தமிழின உரிமைகளும், பெருமைகளும் வயிற்றுப் பிழைப்புக்காக நடத்துவதால் தமிழகத்திலுள்ள கட்சிகளாலும், இயக்கங்களாலும், தமிழகத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

48. நாத்திக வெறியோடு மதத் தலேவர்களேயும், மதவாதிகளேயும் புண்படுத்திப் பேசுவதால்; தமிழினத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

49. மதக் கல்வியையும், மத வாழ்வையும் மடமையாக எதிர்ப்பதால், தமிழினத்திற்கு நன்மையே இல்லே! இல்லே! இல்லே! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

50. தமிழர்களுக்கு அன்னியத் தலேமையும், அன்னிய வழிகாட்டலும், அன்னிய உறவும் இருக்கின்ற வரையில் தமிழனுக்கு சுயமரியாதை முளேக்காது, தன்மானம் கிடைக்காது, தன்னுரிமை பிழைக்காது. ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

51. தமிழ் மொழியைத் தெரிந்தவனும், தமிழ்மொழியைக் கற்றவனும்தான் இந்துமதத்தைச் செழிக்கச் செய்ய முடியும். அப்படி இந்துமதம்

செழித்தால்தான் தமிழரின் உரிமையும், பெருமையும் செழுச்சி, எழுச்சி, உயர்ச்சி, மலர்ச்சி பெற முடியும். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

52. தமிழர்களே உங்களை உய்ய வைக்கும் மெய்யான முயற்சிகள் துவங்கி விட்டன என்பதை உணர்ந்து மெய்யான இந்துமதத்தை உணர வாருங்கள். கருத்து விளக்கம் பெற வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

53. தமிழர்களே நம்மிடையில் ஒற்றுமை உருவாகும் வழிகளை உணரலாம். வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

54. தமிழர்களே நமது உண்மையான வரலாறு என்ன? இலக்கியங்கள் யாவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

55. தமிழர்களே நமக்கு குருபாரம்பரியம் எது? நமது குருதேவர் யார்? நமது ஆச்சாரியார் யார்? நமது தலைவர் யார்? நமது வழிகாட்டி யார்? நமது வழித்துணை யார்? ... என்பதைப் புரிந்து கொள்ள வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

56. தமிழர்களே நமது வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும், பிரிவுற்றுக் கிடக்கும் மாட்சிச் சிதைவுக்கும், அடிமையுணர்வுக்கும், வெறியுணர்வுக்கும் காரணமாயிருக்கும் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

57. தமிழர்களே! நமது மொழி, நமது இனம், நமது நாடு எனும் முக்கோணக் கோட்டையைப் பழுது பார்க்கும் பணியில் பங்கு பெற வாருங்கள். ***(2013 சனவரி)***

58. தமிழர்களே! தன்னிகரில்லா ஒற்றுமையும், பாசப் பிணைப்பும், பற்றுமிகு உறவும், கிளர்ச்சிமிகு உணர்வும், வளர்ச்சிமிகு உரிமையும் பெற்றுத் திகழக் கூடிய வருங்காலத்தை உருவாக்கும் வழிவகைகளைக் கற்றுக் கொள்ள வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

59. குடும்ப தெய்வம், ஊர் தெய்வம், குல தெய்வம், உலக தெய்வம்... என்ற

இந்துமத அடிப்படைகளைத் தெளிவாகப் புரிய வாருங்கள்! வாருங்கள். ***(2013 சனவரி)***

60. அன்னியர்களின் சூழ்ச்சிகள் பின்னிய வலையில் பிடிக்கப்பட்ட மீன்களாக நமது தலைவர்கள், கலைஞர்கள், பெரியவர்கள் பலியாவதை (விற்பனையாவதை) தடுக்கக் கற்றிட வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

61. கோயில்களும், ஆலயங்களும் இருண்டதேன்! கோலாகல விழாக்கள் கொள்கை இழந்ததேன்? என்பதைப் புரிந்திட வாருங்கள். ***(2012 சூலை)***

62. ஒவ்வொருவரும் அருளுலக ஞானம் பெற்றுத் திகழ வழி தெரிந்திட வாருங்கள். ***(2011 பிப்ரவரி)***

63. மதம் மனித வாழ்வுக்குப் பயன்படாமல் கெட்டுப் போகுமாறு யார் செய்தது? எப்போது செய்தார்கள்! எப்படிச் செய்தார்கள்? .... என்ற பேருண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்! ***(2011 ஏப்பிரல்)***

64. மதத்தின் போதனைகளும், சாதனைகளும் முழுக்க முழுக்கப் பகுத்தறிவுப் போக்குடையவையே! விஞ்ஞான அடிப்படையைப் பெற்றவையே என்ற பேருண்மைகளைச் சான்றோடும், ஊன்றோடும் தெரிந்து கொள்ளலாம் வாருங்கள். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

65. மதமே மனித வாழ்வை ஒழுங்கும், கட்டுப்பாடும், சுறுசுறுப்பும், விறுவிறுப்பும், செயல்திட்பமும், இனிமையும், அன்பும், பற்றுப்பாசமும், ஒற்றுமையும்... உடையவராக விளங்கச் செய்து வளர்க்கிறது என்ற பேருண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***

66. அண்ட பேரண்டங்களையும் பிண்டங்களையும் விண்டுரைத்து வாழ்வியலுக்குப் பொருள் கூறும் மதத்தின் அருமைபெருமைகளையும், அரிய பயன்களையும் ஆராய்ந்து அறிந்து புரிந்து தெரிந்து உணர்ந்து ஏற்றிடலாம் வாருங்கள்! வாருங்கள்! ***(2011 ஆகசுட்டு-டிசம்பர்)***



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினர்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**



**சென்னை, காரனோடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.**

---

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed at Kavin Printers, Madurai